# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் தலைமை நிர்வாகம்.
Annai poopathi Tamilsk Kultursenter sentralstyre
Annai poopathi Tamil Cultural Centre Central committee

30.11.2024

வணக்கம்!

**அன்னை பூபதி றொம்மன் வளாகத்தின் நிறுவனப் பதிவையும் நோர்வே நாட்டின் தகவற் காப்புக்குரிய அங்கத்தவர் விபரங்களையும் சில தனிநபர்கள் சட்டவிரோதமாகப் பயன்படுத்தியமைக்குரிய ஆதாரங்கள் சிக்கியுள்ளன. மேற்படி நபர்கள் தாம் செய்த சட்டத்திற்கு புறம்பான செயற்பாட்டை முழுமையாக ஏற்று, எமது நிறுவனத்தின் எதிர்காலச் செயற்பாட்டை பாதிக்காத வகையில் நடந்துகொள்வதற்கு உறுதி வழங்க வேண்டும். இது தொடர்பான பொறுப்புக்கூறலை எமது நிருவாகத்தோடு மேற்கொண்டு தகுந்த உத்தரவாதங்களை வழங்கினால், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடவடிக்கை எடுக்கப்படும்.**

**எமது நிருவாகத்தின் நெகிழ்வுப் போக்கான மேற்படி விடயத்தை ஏற்க முடியாதவிடத்து , அடுத்த கட்ட நடவடிக்கைகள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். இதர நிறுவனங்களும் இது குறித்து தகுந்த விழிப்புணர்வோடு இனியாவது செயற்படத் தவறக்கூடாது என்று சமூகப் பொறுப்போடு அறியத்தருகிறோம்.**

அன்பான அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூட அங்கத்தவர்களே!

அன்னை பூபதி றொம்மன் வளாகத்தின் நிறுவனப் பதிவை எமது நிறுவன விதிமுறைகளுக்கும் நோர்வே நாட்டின் தனிநபர் தகவற் காப்புச் சட்டவிதிகளுக்கும் முற்றிலும் முரணாகப் பயன்படுத்திய குறிப்பிட்ட சில நபர்களின் மோசடி நடவடிக்கைகள் தொடர்பான ஆதாரங்கள் கையும் களவுமாக அன்னை நிருவாகத்திடம் அண்மையில் சிக்கியுள்ளன.

இவற்றை ஆராய்ந்த எமது சட்ட ஆலோசகர்கள் அடுத்த கட்ட நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்ளுமாறு எம்மை வலியுறுத்தியுள்ளனர்.

எனினும், சட்ட ஆலோசனையின் படி அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் குறித்த நபர்களின் தவறான செயற்பாடுகளால், சமூகத்தில் நற்பெயர் காப்பாற்றப்பட வேண்டிய

இதர அமைப்பு மற்றும் நிறுவனங்கள் மேலும் களங்கப்படுவதாக விளைவுகள் அமைந்துவிடும். இதை நாம் விரும்பவில்லை.

இந்தச் சமூகக் கரிசனையின் நிமித்தம் நாம் நிதானமான ஒரு முடிவுக்கு வந்துள்ளோம்.

இந்த முடிவின் படி, குறித்த நபர்கள் தனி நபர்களாக எமது நிருவாகத்தைச் சந்தித்து தமது பொறுப்புக்கூறலை இணக்கமான முறையில் நிறைவுசெய்யுமாறு முதற்கட்டமாக அறிவுறுத்தியுள்ளோம். இது தொடர்பான எழுத்துமூலமான அழைப்பாணை அவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள அவர்கள் தவறும் இடத்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் தவிர்க்க இயலாது மேற்கொள்ளப்படும்.

சமூகப் பொறுப்பைக் கருத்திற்கொண்டு இது குறித்து இதர அமைப்புகளும் நிறுவனங்களும் குறித்த நபர்களின் தனிநபர்ப் பொறுப்புக்கூறலை ஏற்றுக்கொள்ளுமாறு அவர்களை அறிவுறுத்தத் தவறினால் அடுத்த கட்ட நடவடிக்கையால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு அன்னை நிருவாகம் எவ்வகையிலும் பொறுப்பேற்காது என்பதை இத்தால் அனைத்து அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூட அங்கத்தவர்களுக்கும் இதர அமைப்புகளுக்கும் அறியத்தருகிறோம்.

இவர்களது செயற்பாடு அங்கத்தவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் கடுமையான மன உளைச்சல்களை ஏற்படுத்தியுள்ளது தொடர்பான முறைப்பாடுகளும் எம்மிடம் உள்ளன.

இத்தகைய மோசடி நடவடிக்கைகள் இனிமேலும் இடம்பெறாத வகையில் குறித்த நபர்கள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு, பதிவுகள் தொடர்பான பாதுகாப்பு ஒழுங்குகளும் மேலும் கெட்டியாக்கப்பட்டுள்ளன என்பதை இத்தால் உறுதிப்படுத்துகிறோம்.

சட்டப்பண்புகளை மதிக்காத இந்தக் குழுவினரின் இவ்வாறான செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அன்னை பூபதி நிறுவனம் சார்பில் மன வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கல்விக் கூடத்தின் உயர்ந்த நோக்கத்தைச் சீர்குலைத்தவர்கள் தமது நடவடிக்கைகளுக்கான பொறுப்புக்கூறல் ஊடாக தவறுகள் தொடர்ந்தும் இடம்பெறாது தாமும் திருந்தி அமைப்பின் நெறிமுறைகளையும் மதிக்கின்ற நல்ல எண்ணத்தை உருவாக்கும் நற்சிந்தனை உருவாக வேண்டும். அதுவே ஈழத்தமிழ் சமூகத்தின் உயரிய நோக்கங்களை நிலை நிறுத்த வழிவகுக்கும்.

**கிடைக்கப்பெற்றுள்ள ஆதாரங்களில் சில:**

கடந்த ஆண்டிலிருந்து நிறுவனப் பண்புகளையும் சட்ட நெறிகளையும் அப்பட்டமாக மீறும் வகையில் குறித்த சில நபர்கள் செயற்பட்டு வருவதை அங்கத்தவர்களான நீங்கள் அறிந்திருப்பீர்கள். குறித்த நபர்கள் தொடர்ந்தும் இவ்வாறான சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டு வருவதனை பல்வேறு சந்தர்ப்பங்களில் விளக்கமாக எடுத்துக் காட்டி எச்சரித்திருந்தோம்.

இருந்தாலும் நிறுவனப் பண்புகளையும் நோர்வே நாட்டுச் சட்டங்களையும் மட்டுமல்ல எமது சமூக விழுமியங்களையும் மீறுகின்ற அவர்களது செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. குறித்த நபர்களின் செயற்பாடுகள் தொடர்பாக மறுக்கவியலாத எழுத்துமூலமான ஆதாரங்களே தற்போது கிடைத்துள்ளன.

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூட தனிநபர் தகவல்களை சட்டவிரோதமாக பயன்படுத்தியிருப்பதும் நிறுவனப்பதிவைப் பயன்படுத்தி தொடர்பாடல்களில் ஈடுபட்டமைக்குமான ஆதாரங்களே இவையாகும்.

குறிப்பாக aptk.rommen.fau.... , aptk.fau.... மின்னஞ்சல்கள் மற்றும் `98xxxxxx` , 90xxxxxx என்ற தொலைபேசி இலக்கங்களின் ஊடாக மோசடி செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளது பதிவு செய்யப்பட்டுள்ளது. அங்கத்தவர்களான பெற்றோரை அன்னை நிறுவனத்திற்கு எதிராக திசை திருப்பும் கயமைச் செயலில் ஈடுபட்டது ஆதாரத்துடன் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட தொடர்பு இலக்கம், மின்னஞ்சல்கள் இந்தக் குழுவின் முழுமையான பயன்பாட்டில் இருந்ததும் கண்டறியப்பட்டுள்ளது.

**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் தலைமை நிர்வாகம்.**
Annai poopathi Tamilsk Kultursenter sentralstyre
Annai poopathi Tamil Cultural Centre Central committee

இந்த இலக்கங்களில் சில இதர அமைப்பின் ஒரு நிறுவனத்திற்குரிய தொடர்பு இலக்கமாகத் தொடர்ந்தும் பயன்பாட்டில் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வண்ணம்,

நன்றி -
தலைமை நிருவாகம் 2024
அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்

**Avtalen er elektronisk godtatt ved bestilling og bekreftet av bestiller.**

| Firmainformasjon bestiller: | |
|---|---|
| Navn<br>[redacted] | Mobil (for passord og pålogging)<br>+4798[redacted] |
| E-postadresse (for invitasjon til Admin-bruker)<br>aptk.fau[redacted] | Tidspunkt for bestilling<br>22.12.2023 14:22:58 |

| Firmainformasjon: | |
|---|---|
| Firmanavn/Organisasjon<br>ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER ROMMEN | Faktura ønskes sendt som:<br>Epost |
| Organisasjonsnummer (9 siffer)<br>998058422 | Kontaktperson / telefon<br>[redacted] / +4798[redacted] |
| Adresse felt 1<br>Nedre Rommen 3 | Postnummer/-sted<br>0988 OSLO |
| Adresse felt 2 | Deres referanse<br>[redacted] |

**Vilkår til avtalen**

Denne avtalen er inngått mellom Front Information AS (heretter "Front"), og Kunden (angitt over). Bestiller bekrefter, ved å godta forretningsvilkårene, å ha fullmakt til å bestille tjenestene, og eventuelle endringer/tillegg, på vegne av organisasjonen, og at alle opplysninger som er gitt er korrekt. Forretningsvilkårene (vedlegg A) ligger som vedlegg til denne avtalen, og kan finnes under www.fro.no/vilkar/ eller "Konto – Min Profil" når du er logget inn på tjenesten. Der finner man også Databehandleravtale (vedlegg B), og Personvernerklæring (vedlegg C). Bestillinger legitimeres ved å få bekreftelse både via epost og mobiltelefon for å kunne opprette en konto. Så lenge ikke annet er avtalt, så er det standard 3 måneders oppsigelsestid for abonnementstjenester, som også følger av forretningsvilkår vedlegg A til denne avtalen.

Under vises produkter som ble lagt inn ved bestilling, men administratorbrukere kan legge til, eventuelt fjerne, produkter etter behov i etterkant:

**Bestillingslogg**

Produkter: SMS enkeltutsendelse
IP-adresse: 213.212.[redacted]
Forretningsvilkår, Databehandleravtale og Personvernerklæring godtatt: Ja

Side 1 av 1

**Figur 1: ஆதாரம் - 1**